1979 அக்டோபர் 31]

காவலர், எட்டு காவலர்-தரம் 1 ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஆதலால், சென்னை மாநகராட்சி தனி அலுவலர் அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை,

அரசு ஆணை நிலை எண் 2228, உள் துறை, நாள் 7-9-1976ல் ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்கள் தற்போது நடமாடும் நீதிமன்றங்களாக செயல்படாமல் XIX, XX மெட்ரோ பாலிடன் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களாகச் செயல்படுகின்றன. 19-11-1977 முதல் இவை காலை நேரங்களில் அந்தந்த டிவிஷனில் உள்ள வட்ட அலுவலகம் ஏதாவது ஒன்றில் செயல்படுகின்றன. மாலை நேரங்களில் இவை கண்ணப்பர் திடல், மற்றும் நுங்கம்பாக்கத்தில் உள்ள வட்ட அலுவலகங்களில் செயல்படு கின்றன. இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கு உதவியாக நியமிக்கப் பட்டகாவல் துறை அலுவலர்களின் பதவிகள் 29-2-1980 முடிய நீட்டிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு பதில் என்னவென்றால், நகர் நலக்குற்றங்களைத் தடுப்பதற்கு நியமிக்கப்படும் காவல் துறை அலுவலர்களுக்கான முழுச்செலவையும் சென்னை மாநகராட்சி ஏற்றுக்கொள்ள சம்மதிக்கிறதா, என காவல்துறை யினரால் கேட்கப்பட்டது. இதற்கிடையில், நகர்நலக் குற்றங் களைத் தடுக்க இரண்டு நீதிமன்றங்களை ஏற்படுத்திவிட்டதால் சென்னை மாநகராட்சி தனி அலுவலர் அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

காவல் துறையில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறை

* வினா எண். 60-ஆ—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போக்குவரத்துப் போலீசாருக்கு என ஒரு கட்டுப் பாட்டு அறை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்);

(அ) & (ஆ) தற்போது ஒரு போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது. இதற்குத் தனியாக ஒரு வானொலி வழி அமைக்கப்பட்டுள்ளது. இத்தனி வழியாக போக்குவரத்து சம்பந்தப்பட்ட அறிவுரைகளைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறவும், நெரிசல்களைப் தவிர்க்கவும், குறிப்பாக முக்கிய பிரமுகர்கள் வருகை தரும்போதும் மற்றும் ஊர்வலங்கள் வரும் போதும் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய மிகவும் பயன்படு கிறது. பொதுமக்கள் சாலை விபத்து, மற்றும் போக்குவரத்து சம்பந்தப்பட்ட பல விஷயங்களில் நேரடித் தொடர்பு கொள்ள தனித் தொலைபேசிகள் இந்த கட்டுப்பாட்டு அறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தனித் தொலைபேசிகள் பற்றிய விவரங்கள் திரை அரங்கு விளம்பர கண்ணாடி மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.